டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.08.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 043 - Madurai | Online Edition

# தமிழக வேளாண் பட்ஜெட் 2026-27 முக்கிய அம்சங்கள்

சென்னை, ஆக.6

தமிழக சட்டப்பேரவையில் 2026-27-ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து நேற்று வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார்.

வேளாண் பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு :

நஞ்சில்லா வேளாண் முறைகளை ஊக்குவித்து, விவசாயி களின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்க நீலகிரி மாவட்டம் ஊட்டியில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும். இதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உழவர் சந்தைகளை புனரமைக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு மற்றும் 50 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதிகளை ஏற்படுத்த ரூ.4.80 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்படும் மற்றும் திருக்கோவிலூர், முசிறி, காரைக்குடி, தாராபுரம், கும்பகோணத்தில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.

இ-வாடகை 2.0 செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்து 463 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ரூ.41 கோடியில் தென்னை சிறப்பு திட்டம், தென்னை டானிக் பூச்சி நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துதல், கரூர் மாவட்டத்தில் தென்னை நாற்றுப் பண்ணை, தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம், கொப்பரைக்கு விலை ஆதரவுத் திட்டம் அரசு செயல்படுத்தவுள்ளது மற்றும் தென்னை சார்ந்த பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்ய ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம் (TNCPC) அமைக்கப்படவுள்ளது.

1000 விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியம் 80% மானியத்தில் மின்கட்டமைப்புடன் சாராத சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்படு கிறது. மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து மற்றும் தென்னை ஆகியவற்றில் 100% மானியத்தில் 225 ஏக்கர் பரப்பளவில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமய மாக்குதலுக்கான செயல்விளக்கங்கள் அளிக்க ரூ.46.37 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

100% மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல் மற்றும் 75%மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளை தூர் வாருதல் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.8.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் களப்பயிற்சிக்காக 6 புதிய பேருந்துகள் வாங்க ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், தஞ்சாவூர் மாவட்டம், சாக்கோட்டையில், நம்மாழ்வார் பெயரில் ஒரு புதிய உயிர்ம வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரி ரூ.5 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

வேளாண் விளைப்பொருட்களுக்கு 100 சதவீதம் பயிர்க் காப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உயிர்ம உரப் பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4000 சிறப்பு ஊக்கதொகை வழங்கப்படும்.

மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.

கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க ரூ.9 கோடி மதிப்பீட்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

1 கோடி விவசாயிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் மண் வள அட்டைகள் வழங்கப்படும்.

‘வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம்’ – மாடித் தோட்டம் அமைக்க இடுபொருள் தொகுப்புகள், காய்கறி விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள், நீரியல் தோட்டம், செங்குத்துத் தோட்டம், நிழல்வலைக் குடில்கள் வழங்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான மாநில அரசின் சிறப்புத் திட்டம் ரூ 34.72 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம் ரூ.203.64 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற பயிர்களின் சாகுபடியை இருமடங்காக அதிகரிக்க ‘தமிழ்நாடு குறுதானிய இயக்கம்’ரூ.7.61 கோடி மதிப்பீட்டில் இயங்கும்.

மழை, வெயிலிலிருந்து விளைபொருட்களைப் பாதுகாக்க 43,500 தார்ப்பாய்கள் வாங்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**9. மஷ்ரூம் சூப்**



**தேவையான பொருட்கள்**

மஷ்ரூம் — 200 கிராம்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

பால் — ½ கப்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

மஷ்ரூமை வதக்கி அரைத்து பால் சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# விதி மீறிய பூச்சி மருந்து விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை

## வேளாண்மை துறை அதிகாரிகள் தகவல்



திருப்பூர், ஆக.6

வேளாண்மை இயக்குனர், சென்னை, உத்தரவின் படி, அரியலூர் மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், திருப்பூர் மாவட்டத்தின் வேளாண்மை இணை இயக்குனர் ஆதி சாமி அறிவுரையின்படி, மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது போது வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தா மற்றும் தேவி, வேளாண்மை அலுவலர் ஹரிணி ஆகியோர் கலந்து கொண்டனர். வட்டாரத்தில் உள்ள தனியார் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யப்பட்டது. விற்பனை நிலையங்களில் பூச்சிக்கொல்லி மருந்து இருப்புகள், முதன்மை சான்றுகள், விற்பனை பில், விவசாயிகளுக்கு அவர்கள் முகவரியுடன் தொலைபேசி எண்ணில் குறிப்பிடப்பட்டு உள்ளதா என்பதை எல்லாம் ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின் போது பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டம் 1968 மற்றும் பூச்சி மருந்து விதிகள் 1971ன் படி ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டத்தை மீறிய பூச்சி மருந்து விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை விதிக்கப் பட்டுள்ளது. பூச்சி மருந்து விற்பனை உரிமம் பெற்ற அனைவரும் விலைப் பட்டியல் கண்டிப்பாக பராமரிக்க வேண்டும். விற்பனை பில்லில், விவசாயிகளின் அனைத்து விவரமும் இடம் பெற வேண்டும். மற்றும் விவசாயி அவர்கள் பூச்சி மருந்து என்பதை அறிந்து கொண்டு இதை விவசாயத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதில் கையொப்பம் போடச் சொல்லி விவசாயிக்கு விற்பனை பில் தர வேண்டும். பூச்சி மருந்து இருப்பு ஸ்டாக் புக்கில் உள்ள இருப்பு சரியாக இருக்க வேண்டும், விவசாயிகளுக்கு உரிய விலையில் விற்பனை செய்ய வேண்டும். எப்போதும் பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டத்தின் படியும் பூச்சி மருந்து விதியின்படியும் நடந்து கொள்ள அறிவுரை செய்யப்பட்டது.



மேலும், விவசாயிகளுக்கு உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூஞ்சானம் கொல்லிகள் எடுத்துச் சொல்லி அவற்றின் பயன் களையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி பூச்சி மருந்து பயன்பாட்டை குறைத்து அதிக அளவு உயிரியல் கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடிக்க விவசாயிகளிடம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு சாகுபடி செய்யும் பயிர்களுக்கு பரிந்துரைக்கப் பட்ட அளவுகளுக்கு மட்டுமே பூச்சி மருந்து, பூஞ்சான மற்றும் களைக்கொல்லி, மருந்துகளை வழங்க வேண்டும். மேற்கண்ட வகையில் மருந்துகளை வழங்கிய பின் வசாயிகளுக்கு கண்டிப்பாக விற்பனைக்கு பில் அவசியம் தர வேண்டும். உடனடியாக ஸ்டாக் புக்கில் கழிக்கவும் வேண்டும் என்று உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறினார்.

# விதை பரிசோதனை அலுவலர் ஆய்வு



திருவண்ணாமலை, ஆக.6

திருவண்ணாமலை விதை பரிசோதனை நிலையத்திற்கு விதைப்பரிசோதனை அலுவலர் அ.இளையராஜா. காஞ்சிபுரம். ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது அனைத்து பதிவேடுகளும் பார்வையிட்டார். Seed Blower உபகரணத்தை செயல்முறை செய்வதை ஆய்வு செய்தார். அது எப்படி உபயோகப்படுகிறது என்பது பற்றியும் அது எப்படி செயல்படுகிறது என்பது பற்றியும் ஆய்வு செய்தார்.

மேலும் Incubator, Hot Air Oven, Dehuller, Dehumidifier போன்ற உபகாரணங்கள் எப்படி பயன்படுகிறது என்பதையும் ஆய்வு செய்தார். முளைப்பு திறன் அறையை பார்வையிட்டார். முளைப்புதிறன் அறையின் ஈரப்பத அளவையும், வெப்பநிலை தன்மையையும் கண்டு அறிந்தார் மற்றும் விதை காப்பு மாதிரிகள் அறையையும் பார்வையிட்டார். விவசாயிகளுக்கு குறைந்த செலவில் தரமான விதைகளை தருவதே நம் விதை பரிசோதனையின் நிலையத்தின் நோக்கம் என்பதை வேளாண் அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL


Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வறட்சியைச் சமாளித்து மகசூலை உயர்த்த 'பூசா ஹைட்ரோஜெல்'

## வேளாண் உதவி இயக்குநரின் விழிப்புணர்வுத் தகவல்!

சேலம், ஆக.6




கோடை காலம் மற்றும் குறைந்த மழைப்பொழிவு நிலவும் காலங்களில் வறட்சியைச் சமாளித்து, பயிர்களைக் காப்பாற்ற 'பூசா ஹைட்ரோஜெல்' (Pusa Hydrogel) எனும் நவீன தொழில்நுட்பத்தைப் விவசாயிகள் பயன்படுத்தலாம் என எடப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### பூசா ஹைட்ரோஜெல் என்றால் என்ன?

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் (ICAR) உருவாக்கப்பட்டு, மத்திய வேளாண் அமைச்சகம் மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறையால் தீவிரமாக ஊக்குவிக்கப்படும் ஒரு நவீன குருணை வடிவப் பொருளே பூசா ஹைட்ரோஜெல் ஆகும்.

**நீரைச் சேமிக்கும் திறன் :** இது தனது எடையைப் போல் 350 மடங்கு நீரை உறிஞ்சி மண்ணில் ஈர்ப்புடன் தக்கவைத்துக் கொள்ளும். பயிருக்குத் தேவையான போது இந்த ஈரப்பதத்தை மண்ணிலிருந்து பயிர்களின் வேர்களுக்குச் சிறுகச் சிறுக வழங்கும்.

**உரச்சத்து மேலாண்மை :** பயிர்களுக்கு இடப்படும் உரச்சத்துக்களைக் கரைத்து, விரயமாகாமல் 40% முதல் 60% வரை பயிர்களுக்குக் கிடைக்கச் செய்கிறது.

### பயன்படுத்தும் பயிர்கள் மற்றும் நன்மைகள்

**பயிர்கள் :** தானியப் பயிர்கள், காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள்,

பூச்செடிகள் மற்றும் நறுமணப் பயிர்கள் உட்பட அனைத்து வகையான பயிர்களுக்கும் இதைப் பயன்படுத்தலாம்.

**நாற்றங்கால் மேலாண்மை :** வேளாண், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் நாற்றங்கால்களுக்குப் பூசா ஹைட்ரோஜெல் மிகச் சிறந்த பலனைத் தருகிறது.

(குறிப்பு : தேயிலை, காபி, தென்னை, முந்திரி, ரப்பர் மற்றும் வன மரப்பயிர்கள் தவிர்த்து மற்ற அனைத்துப் பயிர்களுக்கும் ஏற்றது).

**தரம் மற்றும் மகசூல் :** வறட்சிக் காலங்களில் பயிர்கள் வாடாமல் காப்பதோடு, விளைபொருட்களின் தரத்தையும் எடையையும் உயர்த்துகிறது.

**நீர்ச் செலவு குறைவு :** பாசன நீரின் தேவையைக் குறைத்து, நீர் பாய்ச்சும் இடைவெளியை அதிகரிக்க உதவுகிறது.

**பரிந்துரைக்கப்படும் அளவு மற்றும் விலை**

**ஏக்கருக்குத் தேவையான அளவு :**

**பொதுவான பயிர்கள் (தானியங்கள், காய்கறிகள்) :** ஏக்கருக்கு 1 முதல் 1.5 கிலோ.

**மணற்பாங்கான நிலங்கள் :** ஏக்கருக்கு 2 கிலோ வரை பயன்படுத்தலாம்.

**தோராயமான விலை :** சந்தையில் கிலோ ஒன்றுக்கு ₹.1,000 முதல் ₹.1,250 வரை விற்பனை செய்யப்படுகிறது. (வேளாண்மை துறை மற்றும் அரசு மானியத் திட்டங்களின் மூலம் இன்னும் குறைவான விலையிலும் கிடைக்க வாய்ப்புள்ளது).

**பயன்படுத்தும் முறை (How to Use)**

**மானிய / நேரடி விதைப்புப் பயிர்களுக்கு (Field Crops)**

1.5 கிலோ பூசா ஹைட்ரோஜெல்லை 10 முதல் 12 கிலோ உலர்ந்த நைசான மண் அல்லது மணலுடன் நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

விதையிடும் போது அல்லது உரம் இடும் போது, விதைக்கு மிக அருகில் 4 முதல் 6 இன்ச் ஆழத்தில் (வேர்ப்பகுதியில்) இடுமாறு மண் அடியில் வைத்து மூட வேண்டும்.

**நாற்றங்கால்களில் (Nursery Beds)**

நாற்றங்கால் பாத்தியில் ஒரு சதுர மீட்டருக்கு 2 கிராம் பூசா ஹைட்ரோஜெல்லை மண்ணின் மேற்பரப்பில் இருந்து 2 இன்ச் ஆழத்தில் கலந்து பயன்படுத்த வேண்டும்.

**நாற்று நடும் போது (Transplanting)**

1 லிட்டர் நீரில் 2 கிராம் பூசா ஹைட்ரோஜெல்லைக் கலந்து அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.பிடுங்கிய நாற்று களின் வேர்களை இந்த க்ரீம் போன்ற கரைசலில் தோய்த்து எடுத்து நிலத்தில் நடவு செய்ய வேண்டும்.

**தொட்டி / மரக்கன்றுகளுக்கு**

1 கிலோ மண்ணிற்கு 3 முதல் 5 கிராம் என்ற அளவில் கலந்து பயன்படுத்தலாம்.

விவசாயிகளுக்கு எடப்பாடி வேளாண் உதவி இயக்குநரின் ஆலோசனை : ‘தற்போது நிலவி வரும் சீரற்ற வானிலை மற்றும் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள, பூசா ஹைட்ரோஜெல் தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். விதை விதைப்பின் போதோ அல்லது நாற்று நடும் போதோ வேர்ப் பகுதியில் பூசா ஹைட்ரோஜெல்லை இடுவதன் மூலம் வறட்சி யிலும் பயிர்கள் பசுமையாகவும் ஆரோக்கியமாகவும் வளரும்.

## கம்பில் மேம்படுத்தப்பட்ட உழவியல் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி




கடலூர், ஆக.6

கடலூர் மாவட்டம், விருத் தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக 6.8.26 அன்று குறிஞ்சிப்பாடி வட்டாரம் வடக்கு, குருவப்பன்பேட்டை கிராமத்தில் கம்பில் மேம்படுத்தப்பட்ட உழ வியல் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன் துவக்கி வைத்தார். இப்பயிற்சியை முனைவர் க.கலைச்செல்வி, தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல் துறை) நடத்தினார். இப்பயிற்சியில் சூப்பர் எல்நினோ பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது.

கம்பில் உழவியல் தொழில்நுட்பங்களான, விதைநேர்த்தி பற்றியும், உப்புக் கரைசல் (1 கிலோ கல் உப்புக்கு 10 லிட்டர் தண்ணீர்) கொண்டு பொக்கு மற்றும் நோய் தாக்குதலுக்கு உட்பட்ட விதைகளை பிரித்தெடுத்தல் பற்றியும் விவரிக்கப்பட்டது.

அனைத்து தூர்களிலும் கம்பு கதிர் வர மேலுரமாக 15 மற்றும் 30 நாட்களில் யூரியா இடுதல் குறித்து வலியுறுத்தப்பட்டது. களை மேலாண்மையில் அட்ரசின் களைக்கொல்லி, 0.25 கிலோ, எக்டர் மூன்றாவது நாள் தெளிக்க வேண்டும்.

கம்பு இப்பகுதியில் ஒரு முக்கிய பயிர் என்பதனால் இப்பயிற்சி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்தது.

இப்பயிற்சிக்கு கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம் வடக்கு, குருவப்பன்பேட்டை கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



# வாழையில் பனாமா வாடல் நோய் தடுப்பது எப்படி?



வாழையில் பனாமா வாடல் நோய் என்ற ஃபுசோரியம் ஆக்சிஸ் போரம் ( FUSARIUM OXYSPORUM ) பூஞ்சையால் வாழை மரங்களுக்கு வாடல் நோய் உருவாகிறது. இது ஒரு தீவிரமான மண்வழித் தாவர நோயாகும். இது மரங்களின் வேர்கள் மற்றும் நீர் கொண்டு செல்லும் திசுக்களை பாதித்து முழுமையாக அழிக்கிறது.

## தாக்குதல் அறிகுறி?

பனாமா வாடல் நோய் 4 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய கன்றுகளை தாக்குகிறது. மீண்டும் மீண்டும் வாழை சாகுபடி செய்தாலும் பூஞ்சான தாக்குதல் ஏற்படும். வேர்களை தாக்கும் போது கிழங்கின் உட்திசுக்களில் நிறமாற்றம் ஏற்படுகிறது. ஆரம்ப நிலையில் இலைக்காம்புகளின் அடிப்பகுதியில் வெளிர் பச்சை முதல் பழுப்பு நிற கோடுகள் காணப்படும். நாம் உண்ணக் கூடிய தண்டுபகுதியை வெட்டி பார்த்தால் வெளிர் நிற சிவப்பு நிறமாகும். தாக்குதல் தீவிரமடையும் போது, அடி இலைகளிலிருந்து மேல்புறமாக இலைகள் காய்ந்து தொங்கும். நாளடைவில் வேர், கிழங்கு பகுதி, தண்டுப்பகுதியில் இருந்து இலைகள் பிரியும் இடத்தில ஓடிந்து தொங்கும்.

## தடுப்பு முறை

வாழை கட்டைகளை நடுவதற்கு முன்னதாக பூஞ்சான கொல்லி விதை நேர்த்தி செய்ய வேண்டும். டிரைகோடெர்மா அல்லது பேசில்லஸ் கொண்டு விதை நேர்த்தி செய்த பின் நடவேண்டும். நடவின் போது குழிக்கு ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். நடவு செய்த 45 முதல் 60 நாட்களுக்கு ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை அதிகம் இடுவதால், அதன் மூலக்கூறுகள் வேர்

வளர்ச்சியை அதிகப்படுத்தி, நோய் எதிர்ப்புப் தன்மை பெறுகிறது. சுத்தமான பண்ணை கருவிகளை பயன்படுத்திட வேண்டும். நான்காம் மாதத்தில் இருந்து 20 நாட்களுக்கு ஒரு முறை டிரைக்கோடெர்மா, பேசில்லஸ் கொல்லியை தலா 50 கிராம் எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து வேர்பகுதியில் ஊற்ற வேண்டும்.

ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி செய்தால் நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஈரோட்டில் இப்கோ வயல் விழா




ஈரோடு, ஆக.6

ஈரோடு மாவட்டம், கலிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நானோ விழிப்புணர்வு முகாம் மற்றும் வயல் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி இப்கோ கள அதிகாரி, வினோத் தலைமையில் நடைபெற்றது. இதில் 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் வினோத், நானோ திரவ உரங்கள், சாகரிகா திரவம், சாகரிகா துகள்கள் மற்றும் நீரில் கரையக் கூடிய உரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம், பயன்பாட்டு முறை, பயன்கள் மற்றும் நிலையான வேளாண்மைக்கு மண்வளத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளித்தார். மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், நானோ உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நிகழ்ச்சியின் நிறைவில், கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக உறுதியளித்தனர். இதனை தொடர்ந்து, அனைவருக்கும் பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

# விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்களுடன் வயல்வெளி கூட்டாய்வு





விருதுநகர், ஆக.6

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அலுவலர் களுடன் வயல்வெளி கூட்டாய்வு குன்னூர் மற்றும் சுந்தர பாண்டியம் கிராமத்தில் கள ஆய்வு செய்தனர். பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளம், பருத்தி, தென்னை, உளுந்து மற்றும் காய்கறிகள் ஆகிய பயிர்களை அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் னி.ராமசுப்பிரமணியன், டாக்டர் P.பாலசுப்ரமணியன், இணைப் பேராசிரியர் (தோட்டக்கலை) டாக்டர் K.கிருஷ்ணா சுரேந்தர் உதவி பேராசிரியர், டாக்டர் ஜடா கவிதா (பயிர் பாதுகாப்பு) மற்றும் வத்திராயிருப்பு வேளாண்மை உதவி இயக்குனர் சி.செல்வராணி, துணை வேளாண்மை அலுவலர் P.பால கிருஷ்ணன், கலந்து கொண்டு அமெரிக்கன் படைப்புழுவால் தாக்கப்பட்ட மக்காச்சோளப் பயிரை கள ஆய்வு செய்தனர்.

ஆய்வில் அப்பகுதி விவசாயிகளுக்கு இனிவரும் காலங்களில் மக்காச்சோளம் விதைக்கும் முன் விதை நேர்த்தி செய்து விதைக்கவும், வரப்பு பயிர்களான (தட்டைப் பயிறு, சூரியகாந்தி) விதைக்கவும் வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ அடியுரமாகவும், இன கவர்ச்சி பொறி ஏக்கருக்கு ஐந்து என்ற விகிதத்தில் வைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

காண்டாமிருக வண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் கள ஆய்வு செய்து வயலை சுத்தமாக பராமரிக்கு மாறும், இன கவர்ச்சி பொறி 5 எண்ணம் / ஏக்கருக்கு வைக்கவும் தெரிவிக்கப்பட்டது. சுந்தரபாண்டியம் கிராமத்தில் வம்பன் 11 உளுந்து பயிர்கள் மஞ்சள் தேமல் நோயால் பாதிக்கப் பட்டதை ஆய்வு செய்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வறட்சி காலங்களில் வீரியமான விதை முளைப்பிற்கு விதை நேர்த்தி முறைகள்

திருவள்ளூர், ஆக.6

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் வறட்சி காலங்களில் வீரியமான விதை முளைப்பிற்கு விதை நேர்த்தி முறைகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் க.செல்வராஜ் விடுத்துள்ள முக்கிய அறிக்கையானது தெரிவிப்பயாதெனில். வறட்சி காலங்களில் குறைவான நீர் பாசனத்தில் விதை முளைப்பு வீரியமாக அமைவதற்கு விதை கடினபடுத்துதல் என்ற விதை நேர்த்தி முறையை பின்பற்றளாம்.

**செய்முறை**

- விதைகளை தேவையான நீர் அல்லது இரசாயனக் கரைசலில் ஒரு குறிப்பிட்ட கால அளவு ஊற வைக்க வேண்டும்.
- பிறகு விதைகளை எடுத்து நிழலில் ஊறவைத்து பழைய ஈரப்பத்திற்கு திரும்ப கொண்டு வர வேண்டும்.
- ஒவ்வொரு பயிருக்கும் வேறுபடுகின்றது. விதைக் கடினப் படுத்துதலின் தொழில்நுட்பம்

| **பயிர்** | **இரசாயனம் மற்றும் அளவு** | **செய்முறை** |
|---|---|---|
| நெல் | 1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு | 10 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 1000 மி.லி உப்புக் கரைசலில் 16 மணி நேரம் ஊற வைத்து முடிவில் பழைய ஈரப் பதத்திற்கே விதைகளை கொணர வேண்டும். |
| பச்சை பயறு | 100 PPM மாங்கனீசு சல்பேட் | 1000 மில்லி கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 350 மி.லி உப்புக் கரைசலில் 3 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். முடிவில் விதைகளை அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப கொணர வேண்டும். |
| உளுந்து | 100 PPM துத்தநாக சல்பேட் | |

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

| | | |
|---|---|---|
| நிலக்கடலை | 0.5 சதவீதம் கால்சியம் குளோரைடு | 5 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 300 மி.லி. உப்புக் கரைசலில் 4 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். முடிவில் விதைகளை அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப கொணர வேண்டும். |
| துவரை | 100 PPM துத்தநாக சல்பேட் | 1 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 300 மி.லி உப்புக் கரைசலில் 4 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். முடிவில் விதைகளை அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப கொணர வேண்டும். |
| கம்பு | 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு | 20 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். ஒரு கிலோ விதையை 650 மி.லி உப்புக் கரைசலில் 10 மணி நேரம் ஊறவைத்து பிறகு பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப பெற வேண்டும். |
| கேழ்வரகு | 0.2 சதவீதம் சோடியம் குளோரைடு | 2 கிராம் உப்பை லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 700 மி.லி உப்புக் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். முடிவில் விதைகளை அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப கொணர வேண்டும். |
| சோளம் | 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு | 20 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 650 மி.லி உப்புக் கரைசலில் 16 மணி நேரம் ஊறவைத்து முடிவில் பழைய ஈரப்பதத்திற்கே விதைகளை கொணர வேண்டும். |

# நஞ்சில்லா உணவிற்கு வீட்டுக் காய்கறி தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் அமைத்தல் பற்றிய பயிற்சி

திருச்சி, ஆக.6

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் அமைத்தல் குறித்த ஒரு நாள் கட்டணப் பயிற்சி 11.08.26 (செவ்வாய்கிழமை) அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் நமது வீட்டின் அன்றாட தேவைகளுக்கு ஏற்ப காய்கறி தோட்டம் அமைத்து நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களுடன் நஞ்சில்லா காய்கறிகளை நாமே உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கை முறை காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தி குறித்த தகவல்கள் அளிக்கப்படும். மேலும் மாடித் தோட்டம் அமைப்பு செயல்முறை, வளர்ப்பு ஊடகங்கள், குழித்தட்டு நாற்றங்கால், பழச்செடிகள் உற்பத்தி போன்ற தலைப்புகளின் கீழ் செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வந்து பயிற்சி கட்டணம் ரூபாய் 590/- நேரிடையாக செலுத்த வேண்டும். முன் பதிவு அவசியம். பயிற்சி நேரம் : காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை. தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் : 0431-2962854, 83381 26730, 98432 18818 என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

# சம்பா மற்றும் தாளடி பருவ விதைப்புக்கு முன் விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவாரூர், ஆக.6

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் ஆயுத்தமாகி வருகிறார்கள். சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி பிரதான விவசாயமாகும். இது வழக்கமாக ஆகஸ்ட் – செப்டம்பர் மாதங்களில் தொடங்கி ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.




சம்பா – தாளடி பருவத்தில் நீண்ட கால (145 முதல் 160 நாட்கள்) மற்றும் மத்திய கால (120 முதல் 145 நாட்கள்) வயதுடைய இரகங்கள், பயிரிடும் சூழல் மற்றும் பாசன வசதிக்கு ஏற்ப தேர்வு செய்யப்பட்டுப் பயிரிடப்படுகிறது.

விவசாயத்தின் அடித்தளமே நல்ல விதைகள் தான். பலவிதமான நவீன முறைகள் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டாலும் நல்ல தரமான முளைப்புத்திறன் கொண்ட விதைகள் தான் பயிரின் விளைச்சலைப் பெரிதும் நிர்ணயிக்கின்றன. சாகுபடிக்கு தேவை யான நீண்டகால விதை நெல் இரகங்களான சி.ஆர்.1009 சப் -1, சாவித்திரி (சி.ஆர்.1009), ஏடீடி – 51 மற்றும் மத்திய கால இரகங் களான கோ.ஆர்-50, டி.கே.எம்.15, நெல்லூர் மகசூரி (NLR· 34449), திருச்சி-3, கோ-56, கோ-57, கோ-58, சம்பா மகசூரி (பிபிடி 5204), வெள்ளை பொன்னி, கேகேம் 1 (KKM1) போன்ற விதைகள் தேவையான அளவு வேளாண் விரிவாக்க மையங் களிலும், வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் சான்று பெறாத தங்கள் சொந்த விதைகளையும் பயன்படுத்தலாம். எனினும் அந்த விதைகள் தரத்துடனும் நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளா என்பதை திருவாரூர் மாவட்ட விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து பின்பு விதைப்புக்கு பயன்படுத்தினால் நல்ல வாளிப்பான பயிர்களைப் பெற்று உயர் மகசூல் பெறலாம்.

எனவே, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள நெல் விதைகளின் தரத்தை அறிய 100 கிராம் விதை மாதிரியும் மற்றும் மாதிரிக்கு ரூ.80/- கட்டணத்தை நேரிலோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், 15-பி, பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பின்வரும் விவரங்களான விதை மாதிரி அனுப்பும் விவசாயியின் பெயர், தந்தை பெயர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பயிரின் வகை, இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவற்றுடன் பின்வரும் அளவில் விதைகளை துணிப்பையில் வைத்து அனுப்பவேண்டும்.

மேற்கண்ட இந்த தகவல் தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார் ஆகியோர் தெரிவித்து உள்ளார்கள்.

# மக்காச்சோள மகசூலை பாதிக்கும் களை மற்றும் பூச்சித் தாக்குதல்களுக்கு தீர்வு காண கோத்ரெஜ் அக்ரோவெட் செயல்படுகிறது!




மதுரை, ஆக.6

இந்தியாவின் முன்னணி வேளாண் – புரத மதிப்புச் சங்கிலி நிறுவனங்களில் ஒன்றான கோத்ரெஜ் அக்ரோவெட் லிமிடெட் (Godrej Agrovet), தனது பயிர் பாதுகாப்புத் தீர்வுகளான அஷிடாகா (Ashitaka) மற்றும் TAKAI மூலம் தமிழ்நாட்டு மக்காச்சோள விவசாயிகளுக்கான தனது ஆதரவை மேலும் வலுப்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் அஷிடாகா மற்றும் டக்காய் வெற்றி கரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மக்காச்சோளத்தின் மகசூலை பாதிக்கும் முக்கியமான களை மற்றும் பூச்சித் தாக்குதல் சவால்களுக்கு தீர்வு காண விவசாயிகளுடன் இணைந்து கோத்ரெஜ் அக்ரோவெட் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடி பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில், பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலையில் ஏற்படும் களைப் போட்டியும், Fall Armyworm (படைப்புழு) போன்ற புழுக்களின் தாக்குதலும் விவசாயிகளுக்கு தொடர்ந்து முக்கிய சவால்களாக உள்ளன. இவற்றை சரியான நேரத்தில் கட்டுப்படுத்தாவிட்டால், மகசூலில் கணிசமான இழப்பு ஏற்படக்கூடும்.

உலகளவில் மக்காச்சோள சாகுபடி பரப்பளவில் இந்தியா 4வது இடத்திலும், உற்பத்தியில் 5வது இடத்திலும் உள்ளது. அதே வேளை யில், தமிழ்நாடு உற்பத்தித்திறன் சார்ந்த வளர்ச்சியில் தனித்துவம் பெற்றுள்ளது. மாநிலத்தில் சுமார் 13.3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சுமார் 33 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் மதுரை மண்டலத்தில் மட்டும் 4 லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோள சாகுபடி நடைபெறுகிறது.

உணவு, கால்நடைத் தீவனம் மற்றும் தொழில்துறை பயன்பாடு களுக்கான மக்காச்சோளத்தின் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பயிரின் மகசூல் திறனைப் பாதுகாப்பதும், வயல்

வெளி உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் மேலும் முக்கியத் துவம் பெற்றுள்ளது.

இதுகுறித்து, கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் Crop Care Business பிரிவின் தலைமை செயல் அதிகாரி N.K.ராஜவேலு கூறுகையில், தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு மக்காச்சோளம் ஒரு முக்கியமான பயிராக உருவெடுத்து வருகிறது. ஆனால், அதன் முழுமையான மகசூல் திறனைப் பெற அறிவியல் அடிப்படை யிலான பயிர் மேலாண்மையும், பயிரின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களும் அவசியம்.

பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலையில் களைகளை திறம்பட கட்டுப் படுத்துவதும், Fall Armyworm (படைப்புழு) போன்ற புழுக்களை சரியான நேரத்தில் கட்டுப்படுத்துவது மகசூல் திறனைப் பாது காப்பதில் மிகவும் முக்கியமானதாகும்.

அஷிடாகா மற்றும் டக்காய், இந்த சவால்களை திறம்பட எதிர் கொள்ளும் வகையில் ஆராய்ச்சி அடிப்படையிலான தீர்வுகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. கோத்ரெஜ் அக்ரோவெட்டில், நவீன பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், பயிர் களின் தாங்குதிறனை வலுப்படுத்தவும், வயல்வெளியில் சிறந்த விளைவுகளைப் பெறவும் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம் என்றார்.

மக்காச்சோளத்தில் களை மேலாண்மைக்கு அஷிடாகா : மக்காச் சோள சாகுபடி உற்பத்தித்திறன் சார்ந்த வளர்ச்சியை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், உள்ளூர் வேளாண் நிபுணத்துவத்தின் ஆதரவுடன் புதுமையான பயிர் பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கு வதில் கோத்ரெஜ் அக்ரோவெட் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. அஷிடாகா, மக்காச்சோளப் பயிருக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட களைக்கொல்லியாகும். இது புல்வகை மற்றும் அகன்ற இலைக் களைகளை திறம்படக் கட்டுப்படுத்த உதவுகிறது.

களைகள் 2-4 இலை வளர்ச்சி நிலையில் இருக்கும் போது, பரிந்துரைக்கப்பட்ட அளவான 50 மி.லி./ஏக்கர் அஷிடாகா, 400 மி.லி./ஏக்கர் சர்ஃபாக்டன்ட் (Surfactant) உடன் பயன்படுத்தப்படும் போது, பயிருக்கும் களைகளுக்கும் இடையிலான போட்டியைக் குறைத்து, பயிர் வலுவாக நிலைபெற உதவுகிறது.

Fall Armyworm (படைப்புழு) கட்டுப்பாட்டிற்கு டக்காய் : களை மேலாண்மைக்கு துணையாக, டக்காய், ISK Japan நிறுவனத்தின் Cyclapryn™ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு பயிர்களுக்கான புழுக்கொல்லியாகும்.

மக்காச்சோளத்தில், விதைத்த 10-15 நாட்களுக்குப் பிறகு முதல் பயன்பாடாகவும், 30-35 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது பயன்பாடாகவும், ஒவ்வொரு முறையும் 160 மி.லி./ஏக்கர் என்ற பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தலாம்.

டக்காய், Fall Armyworm (படைப்புழு)-க்கு எதிராக புழுக்கள் உணவெடுப்பை விரைவாகத் தடுத்து, நீடித்த பாதுகாப்பை வழங்க உதவுகிறது. இதன் மூலம் பயிரைப் பாதுகாத்து, அதன் மகசூல் திறனை நிலைநிறுத்த உதவுகிறது.

அஷிடாகா மற்றும் டக்காய் இணைந்து, மக்காச்சோள சாகுபடியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் இரண்டு முக்கிய சவால்களான களை மற்றும் பூச்சித் தாக்குதலை எதிர்கொள்ள உதவுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் பயிர்களைப் பாதுகாத்து, சீரான மற்றும் சிறந்த உற்பத்தித்திறனை அடைய உதவுகின்றன.

## நங்கவள்ளி வட்டாரத்தில் எல் நினோ வறட்சி குறித்து வேளாண் அதிகாரிகள் கள ஆய்வு



சேலம், ஆக.6

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டாரத்தில் அதிகப்படியான பயிர்கள் வறட்சி காரணமாக காய்ந்து வரும் நிலையில், வேளாண்மைத்துறை சார்பாக நீலாம்பாள், மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) மற்றும் இளம்கவி, உதவி பேராசிரியர், வேளாண் அறிவியல் நிலையம் ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர்.

பெரியசோரகை மற்றும் நங்கவள்ளி கிரமங்களில் நிலக்கடலை மற்றும் சோளம் அதிக அளவில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட வயல்களை கள ஆய்வு செய்தனர். விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்தல் மற்றும் பி.பி.எப்.எம் பாக்டீரியா 1% காலை மற்றும் மாலை வேளை தெளிக்க அறிவுறுத்தினர். இத்தெளிப்பினால் 10 முதல் 15 நாட்கள் வரை பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரும் என்று விளக்கினர். இந்த பாக்டீரியா, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் ரூ.365/லிட்டர் என்ற விலையில் கிடைக்கும் மற்றும் அக்ரி கார்ட் இணையவழி மூலமாகவும் கிடைக்கும் என்று கூறினர். கள ஆய்வில் விமலா, வேளாண்மை உதவி இயக்குநர், கோபி, வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
ISI
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சானமாவு கிராமத்தில் வயல்விழா



கிருஷ்ணகிரி, ஆக.6

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், சானமாவு கிராமத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) கீழ் கரிம இடுபொருள் தயாரிப்புக்கான பயிற்சிகள் மற்றும் வயல்விழா 30.07.26 மற்றும் 01.08.26 தேதிகள் முறையே நடைபெற்றது. இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் செ.பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் ப.பழனி, வேளாண்மை அலுவலர்கள் காருண்யா மற்றும் பானு ஸ்ரீ மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் பிரியா மற்றும் சந்திர சேகர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது விவசாயிகள் அனைவரும் வேளாண் துறை மூலம் கொடுக்கப்பட்டு இருக்கும் திட்டங்கள், மானியங்கள், இடுபொருள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்களை வாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் எல் – நினோ பாதிப்பிலிருந்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள பயிர் காப்பீடுத் திட்டத்தைப் பற்றியும், விவசாய அடையாள அட்டை பெறுவதற்கான உழவர் பதிவேடு (Farmer registry) மற்றும் PM kissan போன்ற திட்டங்களை பற்றித் தெரிவித்தார்.

வேளாண்மை அலுவலர் காருண்யா கூறியதாவது, மண் வளத்தை பாதுகாக்க மண் பரிசோதனை செய்யப்பட்ட கனிம உரங் களையும் இயற்கை உரங்களையும் அதிகமாக உபயோகிக்க வேண்டும். இரசாயன உரங்கள் தேவைகேற்ப அதிகமாக உபயோ கிப்பதை தடுக்கவும், சுற்று சூழலை பாதுகாப்பதற்கும் மண் பரிசோதனை அவசியமாகும். மண்மாதிரி எடுப்பதற்கு முன் மண் மாதிரி சேகரிக்கும் இடத்தில் உள்ள இலை, சருகு, புல் ஆகியவற்றை மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். சாகுபடி செய்யும் பயிரைப் பொறுத்து நிலத்தில் 'V' வடிவில் குழிவெட்டி அந்த மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். வெட்டிய 'V' வடிவ குழியில் இருந்து மேலாக இரண்டு புறமும் ஒரே சீராக மண்ணை வெட்டி எடுக்க வேண்டும். ஒரு வயலில் ( | ஏக்கருக்கு குறைந்தது 7.10 இடங்களில் மண்ணை சேகரிக்க வேண்டும். சேகரித்த மண் ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்தி அதில் உள்ள வேர், தண்டு, புல், கல் ஆகியவற்றை அப்புறப்படுத்திட வேண்டும். இவ்வாறு சேகரித்த மண்ணை நன்றாக கலந்து அதிலிருந்து அரை கிலோ மண்ணை

கால் குறைப்பட முறையில் எடுத்து ஒரு துணி பையில் இட்டு மண் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும். மேலும் வேளாண்மை அலுவலர் பானு ஸ்ரீ, நீர் பரிசோதனை முக்கியத்துவத்தையும் மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தையும் தெளிவாக எடுத்து விளக்கினார். மேலும் துணை வேளாண்மை அலுவலர் பழனி, இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தையும் அதனை பயன் படுத்தும் வழிமுறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் பிரியா மற்றும் சந்திரசேகர் மண் சேகரிப்பு மற்றும் நீர் சேகரிப்பு வழிமுறைகளை செய்து காட்டினார்கள்.

மேலும் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் பெ.பிரியா, கரிம இடுப்பொருள்களைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தையும், தயாரிப்பு முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகளை விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பீ.பழனி சாமி, இயற்கை வேளாண்மை பற்றியும் கரிம இடு பொருள்கள் உபயோகிக்கும் முறைகளை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்து உரைத்தார். பின்பு துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டு விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் இவ்விழாவில் 100க்கும் மேற் பட்ட விவசாயிகள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல் நினோ தாக்கத்தால் வறட்சியில் வாடும் நிலக்கடலைக்கு உயிர் ஊட்டும் கள ஆய்வு



சேலம், ஆக.6

சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டாரத்தில் எல் நினோ காலநிலை தாக்கத்தால் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலக்கடலைப் பயிர் களின் நிலையை வேளாண்மை இணை இயக்குநர் கு.சீனிவாசன், வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ஆர். விஜயன் மற்றும் விஞ்ஞானி டாக்டர் எஸ். இளங்கவி ஆகியோர் நேரில் கள ஆய்வு மேற்கொண்டனர்.

எடையப்பட்டி கிராமத்தில் விவசாயி சி.கோவிந்தன், த/பெ. சின்னத்தம்பி, நிலக்கடலை வயலிலும், பாப்பாம்பாடி கிராமத்தில் விவசாயி சி.ஜெயவேல், த/பெ. சீரங்கன், நிலக்கடலை வயலிலும் பயிர்களின் வளர்ச்சி மற்றும் வறட்சியின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது, வறட்சியால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் PPFM நுண்ணுயிர் கரைசல் இலைவழி தெளிக்கும் செயல் விளக்கம் நடத்தப்பட்டது.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி ஊணஊணய்னி என்ற விகிதத்தில் 200 லிட்டர் கரைசல் தயாரித்து தெளிக்கும் முறையை விவசாயிகளுக்கு செயல் விளக்கமாக விளக்கி காண்பிக்கப்பட்டது. மேலும், எல் நினோ காலத்தில் நிலவும் நீர்ப்பற்றாக்குறையை சமாளித்து பயிர்களைப் பாதுகாக்க தேவையான தொழில்நுட்ப மேலாண்மை முறைகள், நீர் சேமிப்பு நடைமுறைகள் மற்றும் வறட்சி தாங்கும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வேளாண்மைத் துறை அலுவலர்கள், வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

